**தலைப்பு 439 - பெதிக், நெசவுத் துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சு**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

பெதிக், நெசவுத் துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் பெதிக், நெசவுத் துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 மே 07 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூன் 23 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக

ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காண்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாக காட்டுவதன் காரணமாக இடம்பெறுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மீளாய்வாண்டின் போது ஸ்தாபிக்கப்பட்ட புதிய அமைச்சாக இருப்பதனால் நிதிக்கூற்றுக்களை முன்னைய ஆண்டிற்காகத் தயாரிக்கும் தேவைப்பாடு இருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்கள் மற்றும் அரசாங்க தொழில் முயற்சிகளினால் அமைச்சின் செலவுத் தலைப்பிற்கு வரவு வைத்தலாக கட்டுநிதி செம்மையாக்கல் கணக்கில் ரூபா 169,001,318 காட்டப்பட்டிருந்தும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு ACA 2(ii) இல் அது ரூபா 168,755,856 ஆகக் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா 245,464 தொகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு ACA 2(ii) இன் ரூபா 245,464 பணம் ஏடுகளின் பிரகாரம் செலவாகப் பதியப்பட்டிருந்ததனால் இப்பிழை இடம்பெற்றுள்ளதுடன் நிதிப் பிரமாணம் 208 இன் கீழ் அமைச்சு / திணைக்களத்தினால் மேற்கொண்ட செலவு மீதிகளும் ரூபா 169,001,318 ஆக சரி செய்யப்படுதல் வேண்டும். அடுத்துவரும் ஆண்டுகளின் போது நிதிக்கூற்றுக்களை அறிக்கையிடும் போது பதிவு செய்யப்படும். | நிதிப்பிரமாணம் 208 இன் கீழ் அமைச்சு/ திணைக்களத்தினால் மேற்கொண்ட செலவுகள் சரியாகக் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) நிதிக்கூற்றுக்களுடன் அறிக்கையிடும் அடிப்படையினை உள்ளடக்கும் குறிப்புக்கள் வெளிப்படுத்தப்படவில்லை. | அடுத்துவரும் ஆண்டுகளின் போது நிதிக்கூற்றுக்களை அறிக்கையிடும் போது பதியப்படும். | நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் அடிப்படையானது நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். |

**1.6.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 427(2) இன் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் சம்பந்தமாக திறைசேரி ஏடுகளின் பிரகாரம் மீதி ரூபா 3,061,402 ஆக இருந்ததுடன் திணைக்களத்தின் தனித்தனி கணக்குகளின் பிரகாரம் மீதி ரூபா 3,142,936 ஆக இருந்ததனால் அவற்றிற்கிடையே ரூபா 81,534 வித்தியாசம் காணப்பட்டது. அந்த வித்தியாசத்திற்கான காரணம் கணக்குகளில் வெளிப்படுத்தப்படவில்லை. | 2021 ஆம் ஆண்டின் போது தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. | வித்தியாசத்திற்கான காரணம் இணக்க கூற்றுக்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

**1.6.3 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

அமைச்சினால் கீழே தரப்படும் சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறைப்படியாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) ஆளணி வேதனப் பதிவேடு | | |
| நிதிப்பிரமாணம் 453 இன் பிரகாரம் ஆளணி வேதனப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | ஊழியர் பற்றாக்குறை, பதவியணியினரின் புரிந்துணர்வின்மை, பயிற்சியின்மை என்பவற்றின் அடிப்படையில் அப்பதிவேட்டினை நாளதுவரையாக்கி | நிதிப்பிரமாணம் 453 இன் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தின் பிரகாரம் ஆளணி வேதனப் பதிவேடு பேணப்படுதல் |

| | | | |
|---|---|---|---|
| | | முறைப்படியாகப் பேணுவதற்கு முடியவில்லை. தற்பொழுது நாளதுவரையாக்கி குறைபாடுகள் சரி செய்யப்பட்டு வருகின்றன. | வேண்டும். |
| (ஆ) | கணக்காய்வு ஐயவினாப் பதிவேடு<br>-----------------------------------------------<br>நிதிப்பிரமாணம் 452(1) இன் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | நிதிப்பிரமாணம் 452(1) இன் பிரகாரம் கண்ககாய்வு ஐய வினாப் பதிவேடு நாளதுவரையாகப் பேணப்படுதல் வேண்டும். |
| (இ) | திணைக்கள ஒதுக்கீட்டுப் (அங்கீகரித்த செலவு) பேரேடு<br>-----------------------------------------------<br>நிதிப்பிரமாணம் 447 அன் பிரகாரம் திணைக்களத்தினால் ஒதுக்கீட்டுப் (அங்கீகரித்த செலவும்) பேரேடு நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | நிதிப்பிரமாணம் 447 இல் குறிப்பிட்ட ஒழுங்கு விதிகளை பிரகாரம் உள்ளடக்கும் வகையில் 138 ஆவது பொது படிவத்தின் பிரகாரம் திணைக்கள ஒதுக்கீட்டு (அங்கீகரித்த செலவும்) பேரேடு பேணப்படுதல் வேண்டும். |
| (ஈ) | கடன் மற்றும் முற்பணப் பதிவேடு<br>-----------------------------------------------<br>2017 யூலை 05 ஆந் திகதிய 256/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் கடன் மற்றும் முற்பணப் பதிவேடு பேணப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | 2017 யூலை 05 ஆந் திகதிய 256/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் சீ.சீ 10 படிவம் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | | | அந்த படிவத்தை அடிப்படையாகக் கொண்டு கடன்கள் மற்றும் முற்பணங்கள் பதிவேடு பேணப்படுதல் வேண்டும். |
| (உ) | சேதங்கள் தொடர்பான பதிவேடு<br>-----------------------------------------------<br>நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் சேதங்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | நிதிப்பிரமாணம் 110 இலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் அதன் கீழுள்ளவாறான படிவத்தின் பிரகாரம் சேதங்கள் தொடர்பான பதிவேடு பேணப்படுதல் வேண்டும். |
| (ஊ) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு<br>-----------------------------------------------<br>நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு பேணப்படவில்லை. | - மேற்படி - | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்களை நாளாந்தம் பரீட்சிக்கக் கூடிய வகையில் பொறுப்புக்கள் பதிவேட்டில் அப்பொறுப்புக்கள் பதியப்படுதல் வேண்டும். |

**1.6.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| திறைசேரி அச்சுப் பிரதிகளில் நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான பொழிப்பு அறிக்கையின் (SA 80) கீழ் உள்ளடக்கும் வகையில் ஆண்டின் போது கொள்வனவு செய்த சொத்துக்கள் தொடர்பாக | 2020 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்த சொத்துக்கள் அந்த ஆண்டில் திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டிருக்காத துடன் 2021 ஆம் ஆண்டில் | ஆண்டின் போது கொள்வனவு செய்த சொத்துக்கள் தொடர்பாக திறைசேரிக்கு |

| | | |
|---|---|---|
| திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டிருக்காததன் காரணமாக திறைசேரி அச்சுப் பிரதி, நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான பொழிப்பு அறிக்கை (SA 80) என்பவற்றில் எதுவித தகவலும் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | ஆரம்ப மீதியாக கணக்கீடு செய்து அது சரி செய்யப்படும். | அறிக்கையிடப் படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டு தொடர்பாக 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 933,988 கூட்டு மொத்தமான செலவுகள் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் பொறுப்புக்களாக இனங்காணப்பட்டிருக்க வில்லை. | ரூபா 933,988 தொகையான செலவுகளை 2020 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 வரை இனங்காண முடியாததனால் பொறுப்புக்களாக அறிக்கையிடுவதற்கு முடியாதிருந்தது. | மேற்கொள்ளப்பட்ட கடப்பாடுகள் கூற்றில் ஆண்டிற்குரிய அனைத்து பொறுப்புக்களை யும் உள்ளடக்குதல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டிற்காக ரூபா 3,892,515 தொகையான பொறுப்புக்களுக்காக கடப்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் அப்பெறுமதி திறைசேரிக்கு அறிவிக்கப் பட்டிருக்காததன் காரணமாக திறைசேரியின் வருடாந்த பொறுப்புக்கள் / ஒதுக்கங்கள் பொழிப்பு அறிக்கைகளில் (SA 90) எதுவித தகவல்களும் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | இந்த அமைச்சின் 2020 ஆம் ஆண்டிற்கான பொறுப்புக்களை திறைசேரிக்கு அறிவிப்பதற்காக நிதி ஏற்பாடு போதியளவு இல்லாததனால் இது இடம்பெற்றுள்ளது. | மேற்கொள்ளப் படுகின்ற அனைத்து பொறுப்புக்களும் திறைசேரிக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும். |

**2.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| நிதிப்பிரமாணம் 65 இன் பிரகாரம் ஒதுக்கீட்டு அதிகாரச் சட்டத்துடன் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுகின்ற வருடாந்த செலவு மதிப்பீடுகள் மற்றும் பாராளுமன்றத்தின் மூலம் அங்கீகரிக்கப்படுகின்ற பிரேரணைகளின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட செயற்பாடுகளுக்காக நிதி ஏற்பாடு வழங்கப்பட்ட பணம் முறையான அதிகாரமின்றி செலவு செய்யப்படாதிருக்க வேண்டிய போதிலும், செலவு விடய இலக்கங்கள் 439-2-3-4-2202 மற்றும் 439-2-3-5-2202 இன் கீழ் கை இயந்திரம், ஆடை மற்றும் ஆடை சார்ந்த சிறிய அளவிலான தொழிற்சாலைகளின் மூலம் பெண்களை பொருளாதார ரீதியாக வலுப்படுத்துவதற்காக அபிவிருத்தி உதவியாக ரூபா 83,200,000 தொகையான மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் அமைச்சின் பயன்பாட்டிற்காக ரூபா 726,580 தொகையான நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | இச்செயற்திட்டங்களின் மிகுதியான பணத்தை ஏனைய செயற்திட்டங்களுக்கு ஈடுபடுத்துவதற்கு போதியளவு காலம் இல்லாமையும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக அமைச்சு செலவுத் தலைப்பிற்கு போதியளவு பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்காமையும் மற்றும் இந்த உபகரணங்களுக்கு தட்டுப்பாடு காணப்படுகின்றமையையும் கவனத்தில் கொண்டு நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டன. உபகரணங்கள் உரிய முறைப்படி பொருள் இருப்பு பதிவேட்டிற்கு கொண்டுவரப்பட்டு தற்பொழுது அலுவலக செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்படுகின்றன. | பாராளுமன்றத்தின் மூலம் அங்கீகரிக்கப் படுகின்ற பிரேரணைகளில் நிர்ணயிக்கப்பட்ட செயற்பாடு களுக்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்ட பணத்தை முறையான அதிகாரமின்றி மாற்றம் செய்யப்படா திருத்தல் வேண்டும். |

**2.3 செலவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் செலவு விடய இலக்கம் 2102 மற்றும் 2013 இன் கீழ் நிதிச் சொத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்கான நிதி ஏற்பாட்டுப் பணம் ரூபா 1,480,000 ஆக இருந்த போதிலும் ஆண்டின் போது ரூபா 2,368,130 தொகையான சொத்துக்களானது | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமை தொடர்பான கூற்றில் நிதியற்ற சொத்துக்களின் கீழான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி | ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட முழுச் சொத்துக்களும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| அந்த எல்லையை மிகைத்து ரூபா 888,130 செலவு செய்யப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான அறிக்கையின் 6112202 மற்றும் 6112204 ஆம் குறியீடுகளின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 2,100,000 பெறுமதியான சொத்துக்கள் மாத்திரம் நிதி நிலைமைக் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்தன. | ரூபா 2,100,000 ஆகக் காட்டப்பட்டிருந்தது. அதனுள் ரூபா 945,464 தொகையான சொத்துக்களின் பெறுமதியில் ரூபா 700,000.00 தொகையான சொத்துக்கள் உள்ளடங்கியுள்ளன. மிகுதிப் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக் காததனால் அவை 2021 ஆம் ஆண்டில் சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டது. | |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 கடமைகள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| சிறிய அளவிலான ஆடைத் தொழிற்சாலைகளினூடாக பெண்களை பொருளாதார ரீதியாக வலுப்படுத்துவதற்காக கைத்தறிகள் மற்றும் புடவை உற்பத்திப் பிரிவிற்கு 2020 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டிற்காக 439-02-03-05-2201 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் ரூபா 20,000,000 பணம் வழங்கப்பட்டிருந்தது. அவற்றில் ரூபா 15,860,200 தொகையானது 2020 ஆம் ஆண்டின் நவம்பர் மாதத்தில் புடைவை நிலையத்தை திருத்தம் செய்தல் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காகச் செலவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே, செலவு விடய இலக்கம் 439-2-3-4-2202 இன் கீழ் கை இயந்திரம் மற்றும் புடைவைக் கைத்தொழிலுக்காக மாகாண மட்ட செயற்பாடுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 20,000,000 பணத்தில் இயந்திரங்களைக் கொள்வனவு செய்தல், ஊவா | தேவைக்கேற்றவாறு பதவியணியினர் கிடைக்காமை, கொவிட் பரவல் இடம்பெற்றமையின் காரணமாக சில வாரங்கள் அமைச்சு மூடப்பட்டிருந்தமை, ஊழியர்கள் வருகை மட்டுப்படுத்தப்பட்டிருந்தமை முதலிய பல சிக்கல்களுக்கு மத்தியில் கடமைகளை முறையாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அடுத்துவரும் ஆண்டுகளில் இக்குறைபாட்டை தவிர்த்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களின் விடயங்களும் செயற்பாடுகளும் மற்றும் அது தொடர்பான கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை அமுல்படுத்தும் பின் தொடர் நடவடிக்கைகள் மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மாகாணத்தின் ஹல்பே புடைவைக் கைத்தொழில் நிலையத்திற்கு மின்சார வயர்களை இழுத்தல், மொனராகலை புடவை விற்பனை நிலையத்தை திருத்தம் செய்தல் முதலிய செயற்பாடுகளுக்காக ரூபா 8,838,551 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. மேலும் அச்செயற்பாடுகள் சம்பந்தமாக பின்தொடர் நடவடிக்கை எடுத்தலும் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |

**3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 15(3)(இ) பிரிவின் பிரகாரம் மற்றும் திறைசேரி செயலாளரின் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வருடாந்த கணக்குகளுடன் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரித்து சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அமைச்சின் மூலம் 2020 ஆம் ஆண்டிற்காக அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | தேவையான பதவியணியினர் கிடைக்காமை, அமைச்சு மூடப்பட்டிருந்தமை கொவிட் தொற்றுநோய் ஆகிய காரணங்களால் ஊழியர்கள் வருகை தராதமையால் அந்த அறிக்கையை முறைப்படியாக சமர்ப்பிப்பதற்கு முடியாதிருந்தது. அடுத்து வரும் ஆண்டுகளில் இக்குறைபாடுகளைத் தவிர்த்து நிர்ணயிக்கப்பட்ட திகதியில் அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டில் ரூபா 711,580 பெறுமதியான கெமரா துணைக் கருவிகளும் ரூபா 1,388,500 பெறுமதியான கணனிகளும் மற்றும் அச்சு இயந்திரங்களும் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அக்கொள்வனவுகளுக்காக பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.8.1(அ), 2.5.1(இ) 6.3.6(அ) ஆகிய பிரிவுகளில் உள்ள அறிவுறுத்தல்கள் அமைச்சினால் பின்பற்றப் பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.8.1(அ) பிரிவின் பிரகாரம் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்குரிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவுக்காக பெயர் குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு அமைச்சின் தேவைப்பாட்டிற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த உபகரணங்களின் தொழில்நுட்ப இயலுமை தொடர்பாக அவதானிப்புக்களை வழங்குவதற்கு போதியளவு அறிவு இருத்தல் மற்றும் காணப்பட்ட தொற்றுநோய் நிலைமையின் அடிப்படையில் செயற்பாடுகளை நிறைவேற்றும் முறைமையின் காரணமாக அதிக அறிவு உள்ள உத்தியோகத்தர்களை தொடர்புபடுத்திக் கொள்வதில் நடைமுறையில் சிக்கல் உருவாகியிருந்தது. மேலும் இப்பெறுகை நடைமுறை இடம்பெற்றது 2020 திசெம்பர் மாதத்தில் என்பதனால் அக்காலத்தில் நாட்டில் கொவிட் 19 தொற்றுநோய் தீவிரமடைந்து காணப்பட்டதனால் அலுவலகமானது குறைந்த அளவு | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | உத்தியோகத்தர்களை அழைத்தே செயற்பட்டிருந்தது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் சில விடயங்கள் கோவையில் குறிப்பிடப்படாதிருக்கலாம் என்ற போதிலும் இப்பெறுகை நடைமுறையானது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் பெறுகைக் குழுவின் அனைத்து அங்கத்தவர்களினதும் இணக்கப்பாட்டின் பேரில் இடம்பெற்றது. | |
| (ஆ) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.7.4 ஆம் பந்தியின் பிரகாரம் பெறுகைக் குழுவினை நியமித்தல் அமைச்சின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் செய்யப்பட வேண்டிய போதிலும் இந்த இராஜாங்க அமைச்சின் பிரதம கணக்காளரினால் அவரின் பெயரினையும் உள்ளடக்கி பெறுகை குழு நியமிக்கப்பட்டிருந்தது. | MBHL/FIN/PRO/01 ஆம் இலக்க 2020-11-19 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அமைச்சு செயலாளரின் கையொப்பத்துடன் வேலைகளை வழங்குதல் மற்றும் சேவைகளுக்காக பெறுகைக் குழு நியமித்தல் இடம்பெற்றிருந்தது. | வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பெறுகை குழுவினை நியமித்தல் அமைச்சின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத் தரினால் செய்யப்படுதல் வேண்டும். |
| (இ) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.2.1(அ) பந்தியின் பிரகாரம் கேள்வி கோரல் அழைப்பிற்கான பரிகாரமாக எடுத்துக் கொள்வதற்கு உள்ள பொருட்கள் அல்லது சேவைகள் அல்லது வேலை களுக்காக கேள்விகளை ஆயத்தப்படுத்துவதற்கு கேள்விதாரர் ஒருவருக்கு தேவைப்படுகின்ற அனைத்து தகவல்களும் கேள்வி கோரும் ஆவணங்களில் உள்ளடக்கியிருக்க வேண்டிய போதிலும் ரூபா 1,388,500 தொகையான கணனிகளை கொள்வனவு செய்வதற்காக அவ்வாறு கேள்வி ஆவணங்கள் தயாரிக்கப்படவில்லை. | உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்குத் தேவையான கேள்வி ஆவணங்களில் அத்தியாவசதியமான விடயங்கள் உள்ளடங்கி உள்ளன. | வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் கேள்விகளை ஆயத்தப்படுத்து வதற்கு கேள்விதாரருக்குத் தேவைப்படுகின்ற அனைத்து தகவல்களும் கேள்வி கோரும் ஆவணங்களில் உள்ளடங்கி யிருத்தல் வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| அமைச்சின் செயற்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள 11 வாகனங்களுக்கு ஆண்டின் போது மூலதன சொத்துக்களை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தல் செலவு விடயங்களின் கீழ் ரூபா 798,340 தொகையும் வாகன பராமரிப்புச் செலவுகள் செலவு விடயத்தின் கீழ் ரூபா 1,005,103 தொகையுமாக ரூபா 1,803,443 மொத்த தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. 06/2020 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் இந்த வாகனங்களின் உரிமையைப் பொறுப்பேற்று அமைச்சின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த அமைச்சானது 2020-08-13 ஆந் திகதி தோற்றுவிக்கப்பட்ட ஒரு புதிய அமைச்சாகும். கௌரவ அமைச்சரின் மற்றும் அமைச்சின் கடமைகளுக்காக இந்த வாகனங்கள் பயன்படுத்தப்பட்டதன் காரணமாக 2003 மற்றும் 1301 ஆம் இலக்க செலவு விடயங்களின் கீழ் செலவு செய்து பல்வேறு பழுதுபார்த்தல்களும் ஏனைய புனரமைப்புச் செலவுகளும் மேற்கொள்ளப்பட்டன. இந்த வாகனங்களின் உரிமையை பொறுப்பேற்றதன் பின்னர் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் இந்த வாகனங்களின் உரிமையைப் பொறுப்பேற்று அமைச்சின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குதல் வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் இருபத்து இரண்டு பதவிகளுக்காக 62 பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2021 மார்ச் 10 ஆந் திகதியில் உள்ளவாறு உள்ளபடியான பதவியணியினர் 29 ஆக | பதவியணியினரின் வெற்றிடங்கள் தொடர்பாக அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு அடிக்கடி தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், உத்தியோகத்தர் | நிறுவனத்தின் குறிக்கோள்களை தடையின்றி நிறைவேற்று வதற்காக அங்கீகரித்த மற்றும் போதியளவான பதவியணியினரைச் |

| | | |
|---|---|---|
| இருந்ததனால் 11 பதவிகளுக்காக 33 ஊழியர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அவற்றினுள் சிரேஷ்ட மட்டத்தின் கீழுள்ள உதவி செயலாளர் பணிப்பாளர் உதவி பணிப்பாளர் / பிரதி பணிப்பாளர் ஆகிய 02 பதவிகள், கணக்காளர், உள்ளகக் கணக்காய்வாளர் ஆகிய பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன. | பற்றாக்குறையின் காரணமாக இந்த அமைச்சிற்கு இன்று வரை அந்த வெற்றிடங்களுக்காக உத்தியோகத்தர்கள் கிடைத்திருக்கவில்லை. பதவிகளின் வெற்றிடங்களுக்காக எதிர்காலத்தில் உத்தியோகத்தர்களை வழங்குவதாக அரசாங்க சேவைகள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு இணக்கப்பாட்டினை வெளியிட்டுள்ளது. | சேர்த்துக் கொள்வதற்கு உயர் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |